திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, இம்மாதிரியாக உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி தொடங்க 'மேச்சிங் கிராண்ட்' தருவதற்குப் பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து செலவிட வேண்டுமென்ற ஒரு கொள்கை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் உபரியாக உள்ள பொது நிதியில்ருந்து இம்மாதிரி காரியங்களுக்குக் கொடுக்கலாம் என்று ஒரு அரசு ஆணை இருப்பதாசக் கூறப்படுகிறது. அந்த அடிப்படையில் பள்ளிகள் தொடங்குவதற்கு இந்த நிதியிலிருந்து கொடுக்க திட்ட வட்டமாக அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பணம் பெறுவது குறித்த விவரம் என்னிடம் இல்லை. மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்குப் பொதுமக்களுடைய ஆர்வத்தைப் பொறுத்து, அவர்களே பணம் கட்டினால்தான் அவர்களுக்கு அதிலே அக்கறை இருக்கும்; இல்லையென்றால் அக்கறை இருக்காது; பள்ளிக்குப் போவதில்லை; குழந்தைகள் படிக்கிறார்களா என்று கவலைப்படுவதில்லை; ஆசிரியர்கள் சொல்லித் தருகிறார்களா என்பது பற்றி கவலைப்படுவதில்லை; ஆக, பொது மக்கள் கவனம் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக இதை நீங்கள் ஆதரிக்க வேண்டும்.

மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வு

* வினா எண் 67— திரு செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

அ) மேல்நிலைப் பள்ளி (+2) பொதுத் தேர்வில் மாணவர்கள் தவறிய பாடங்களை மட்டும் எழுதி தேர்வு பெற, அனுமதியளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

ஆ) ஆம் எனில், அந்த முறை இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

அ) அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆ) மேல்நிலைப்பள்ளி (+2) பொதுத் தேர்வில் தேறாத மாணவர்கள் தவறிய பாடங்களை மட்டும் எழுதி தேர்வு பெற இவ்வாண்டு முதலே வகை செய்யப்பட்டுள்ளது.

திரு, செ. செம்மலை : பொதுவாக பிளஸ் 2 பாடத்திட்டம் கடுமையானது. எனவே, மாணவர்கள் ஒட்டுமொத்தமாகக் குழப்பிக்கொள்ளாமல் ஒவ்வொரு கூட்டத்திலும் தனிக் கவனம் செலுத்தி முழுமையாக அறிவு பெற கல்லூரிகளில் இருப்பதைப் போல மேல்நிலைப் பள்ளிகளிலும் செமஸ்டர் முறையை ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, செமஸ்டர் முறையைக் கொண்டுவர வேண்டுமென்ற ஒரு எண்ணம் அரசிடம் இருந்தாலும் அதைப்பற்றி இப்போது பரிசீலனை செய்யவில்லை. பாடங்கள் கொஞ்சம் கடினமாக இருந்தது என்பதால் அவற்றை ஓரளவுக்கு நீக்கி, மாணவர்களின் கஷ்டத்தைப்போக்கி, சரி செய்திருக்கிறோம். இப்போது நல்ல முறையில் படிக்கிறார்கள். பி.யு.சி. மாணவர்கள் படித்ததை விட இந்த ஹையர் செகண்டரி மாணவர்கள் தரம் அதிகமாக இருக்கிறது என்று கல்லூரி ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, பிளஸ் 2 கல்வியில் 35% மார்க்குகள் வாங்கினால் பரீட்சையில் தேர்வு பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி.யில் 35% வாங்கியவர்கள் தேர்வு பெறாதவர்கள் என்று தள்ளப் பட்டிருக்கிறார்கள். புதிய கல்வி முறையில் மேல்நிலைப் பள்ளியில் 35% வாங்கியவர்கள் தேர்வு பெற்றவர்களாகக் கருதப் படும்போது, முன்பே 35% மார்க் வாங்கியவர்களையும் தேர்வு பெற்றவர்களாகக் கருதுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே 35% மார்க் என்று வைத்திருப்பது ஒரு பரீட்சைக்குரிய பெரிய தரம் ஆகாது. ஒரு வருடம் முழுவதும் படித்து, படித்ததில் 50% வாங்கி தேர்ச்சி பெற்றால்தான் தேர்வு பெற்றதாகக் கருத முடியும், 35% என்பது மிக மிகக் குறைவு. எஸ்.எஸ்.எல். சி-யில் சில பாடங்களில் 40% வைக்கப்பட்டு, 35% வாங்கியவர்கள் தேர்ச்சிப் பெறாதவர்களாகக் கருதப்பட்டது. ஆகவே, அதை திரும்ப பரிசீலனை செய்வது சரியல்ல. இப்போது 'ட்ரெயினிங் ஸ்கூலில்' 50% வைத்திருக்கிறோம். ஆசிரியர் பயிற்சியில் 50% வாங்கினால்தான் தேர்ச்சி பெற முடியும். ஆக, நாம் தரத்தை உயர்த்த எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டும். தேர்ச்சிபெற 50%, 60% என்று வாங்க முயற்சி செய்ய வேண்டும்.

டாக்டர். கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, செமஸ்டர் முறை அமல்படுத்தப்படுவதா இல்லையா என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி செமஸ்டர் முறை இல்லாவிட்டாலும் கேரீ ஓவர் என்கின்ற முறை அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, செமஸ்டர் முறையிலேதான் இந்த கேரீ ஓவர் என்ற முறை வருகின்றது. ஆகவே அதுவே இல்லை என்கின்றபோது இதற்கும் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவரவர்களே, பிளஸ் 2 தேர்வில் தவறிய மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தில் மட்டும் மீண்டும் படிக்கக் கூடிய அளவில் அதே பள்ளியில் சேருவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 28

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, தவறியவர்கள் மீண்டும் பள்ளியிலே சேருவது என்பது பல ஒழுக்க பிரச்சினைகளை எழுப்பக்கூடும். மேலும் குறிப்பிட்ட பாடத்தில் தவறியவர்கள் பள்ளிக்கூடத்தில் சேராமலேயே அப்பாடத்தைப் படித்துத் தேர்வு எழுதலாம். அவர்கள் வீணாக ஒரு ஆண்டுக் காலம் அப்பள்ளியில் அதற்காக படித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, ப்ளஸ் 2 படிக்கின்ற மாணவர்கள் தாங்கள் பயிலுகின்ற பள்ளிகளில் சோதனைச்சாலை வசதி இல்லை என்றால் அருகாமையில் உள்ள கல்லூரிகளின் சோதனைச் சாலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளாமல் அந்த சோதனைகளுக்கான மார்க்குகளை மட்டும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்கிவிடுவதாகச் சொல்லப்படுகின்றதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது பற்றி தனிக்கேள்வி கேட்டால் விவரமாகப் பதில் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ப்ளஸ் 2 வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் பாடத்திட்டங்கள் அதிகமாக இருப்பதாலும், ஆசிரியர்கள் பற்றாக்குறையினாலும் தான் தேர்வு பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது என்று சொல்லப்படுகின்றதே, ஆகவே ஆசிரியர்களைப் போதுமான அளவில் நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் ஆராய்ச்சி நிலையம்.

* வினா எண் 68 திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

அ. தமிழ் உயர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

ஆ. இத்தகைய நிலையம் தேவையெனத் தற்போது அரசு கருதவில்லை.